**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC 4 /2026**

**Deposition of Witness LW11/PW5**

| Name | திரு. கன்னிகுமார் | Taluk | |
|---|---|---|---|
| Father’s Name | கந்தசாமி | Village | |
| Age | | Calling | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17.04.2026.** | | | |

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வெங்கமேடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.01.2025 ம்தேதி வெங்கமேடு காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன் நிலைய அலுவலில் இருந்தபோது கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த குமார் மனைவி செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலைய குற்ற எண். 18/2025, ச/பி. 296(b), 115(2), 118(2), 351(3) BNS மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ்வழக்கு பதிவு செய்துள்ளார். **அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) பின்பு இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும்

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

உள்ளார். பின்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சித்ராதேவி அவர்களிடம் வழக்கினை புலன் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளார். பின்பு காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு அன்றைய தினம் காலை 08.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் ரங்கநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்பு இவ்வழக்கின் சம்பவ இடத்தை குறித்து மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றயை தினம் காலை 10.15 மணி அளவில் வெங்கமேடு வாட்டர் டேங்க் பஸ் ஸ்டாப் அருகில் அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 90.5 செ.மீ நீளமும், 4 செ.மீ அகலமும் கொண்ட ரீப்பர் மரக்கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள வழக்கு சொத்து சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாகும். **அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்பு சாட்சிகள் செல்வி, அஜித்குமார், ரம்யா, பிரசாந்த், கண்ணன், ரங்கநாதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி சென்றதில் அன்றைய தினம் மதியம் 01.00 மணிக்கு வெங்கமேடு A1 தியேட்டர் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காட்ட அவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து, தகுந்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

4) பின்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சித்ராதேவி பணி மாறுதலில் சென்றுவிட்டதால், பின்பு வந்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி. ஆர்த்தி இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கில் காயடைந்த செல்வி மற்றும் அஜித் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திருமதி.பரமேஸ்வரி என்பவரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவமனையில் விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ. 8, 9**

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

**ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ. 10, 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்க சொத்தினை படிவம்−91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம்−91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 03.04.2025ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகள் திருமதி.சித்ராதேவி மற்றும் திருமதி.ஆர்த்தி ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து வழக்கு சொத்து கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.